# CHILDREN & ADOLESCENT RECONSTRUCTION TRUST

**D.NO: 2/125, East Street, Meenakshipatti,** **Reg No: 171/07**
**Vadapalanji( Post ), Thirumangalam( T.K ),**
**Madurai – 625021.**

**E-Mail : erulansky@gmail.com, erulan_sky@yahoo.co.in**

**Mobile :-+ 91 99422 41826 /  95665 63307**


---

நாள் :
இடம் : மீனாட்சிபட்டி

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம் நான் மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் கி. மீனாட்சிபட்டியில் வசித்து வருகிறேன். நான் B.Sc., Botany The American College- M.Sc., Sub-Auqa Marine Ecology and Toxicogenomics, Madurai Kamaraj University-லும் படித்து முடித்துள்ளேன். எனது அப்பா இறந்துவிட்டார் அம்மா கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தாள். ஏனக்கு சிறுவயது முதலே சமூக சேவை செய்வதில் மிக ஆர்வம். எனவே நான் எனது ஊரில் பள்ளி மாணவர்களுக்கென ஒரு மாலைநேர வகுப்பு (TUTION) நடத்தி வருகின்றேன்.

இந்த மாலை நேர வகுப்பு மாணவர்களுக்கு வெறுமனே பள்ளி போன்று அல்லாமல் புது விதமான முறையில் வகுப்பு நடத்தினால் நன்றென எண்ணி நான் கல்லூரிக் காலங்களில் கற்றுத் தேர்ந்த தமிழரின் வீர விளையாட்டான சிலம்பம் மற்றும் தமிழரிடையே காணாமல் போய்க் கொண்டிருக்கும் கரகாட்டம் ஒயிலாட்டம் போன்ற நாட்டுப்புறக் கலைகளும் இன்றளவில் அதிகமாகப் பேசப்பட்டு வரும் யோகா தியானம் போன்ற உடல் நல மனப் பயிற்சிகளையும் கராத்தே மல்யுத்தம் போன்ற வீரக் கலைகளையும் என் மாலை நேர வகுப்பு மாணவர்களுக்கும் கற்றுத் தந்தால்

பயனாக இருக்குமென எண்ணி அதை நடைமுறைப்படுத்தினேன். குறிப்பாக நான் ஒன்று சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். மேற்கூறப்பட்டுள்ள எல்லாவற்றிற்கும் எவ்வித கட்டணமும் பெறுவதில்லை. அனைத்தும் இலவசமாகவே பயிற்றுவித்து வருகின்றேன்.

இதன் பயனாக எனது மாலை நேர வகுப்பில் 100 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இப்பயிற்சியின் பயனாக இதுவரை சுமார் 40 மாணவர்கள் மாவட்ட அளவிலான நடைபெற்ற சிலம்பம் மற்றும் யோகா போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளனர். மேலும் 30 மாணவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பல பரிசுகளையும் முதல் மற்றும் இரண்டாம் மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவை தவிர பள்ளிகள் அளவிலான போட்டிகளிலும் எம் மாணவர்களே பரிசுகள் பல பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பிடப்பட்டுள்ள 120 மாணவர்களில் 15 மாணவர்கள் தாய் அல்லது தந்தையை இழந்தவர்கள் ஆவார்கள். இன்னும் சில மாணவர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர்கள் ஆவார்கள். ஆனால் படிப்பில் இவர்கள் முதல் ஐந்து இடங்களில் வருபவர்கள் என்பது மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும்.

மேலும் கடந்த 2007 –ல் CAR TRUST (CHILDRENS AND ADOLESCENT RECONSTRUCTION) – TRUST, என்ற பெயரில் அறக்கட்டளை ஒன்று நிறுவி அதன் மூலம் பல பணிகளைக் குழந்தைகளுக்கென செய்து வருகிறேன். எனவே இவ்வகையான செயல்முறையால் எங்கள் கிராமப்புற மாணவர்கள் நல்ல முறையில் படிப்பதுடன் மட்டுமல்லாமல் விளையாட்டுத் துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். மேலும் இப்பணியானது எங்கள் சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் முயற்சி மேற்கொண்டு வருகிறேன்.

எனவே எனது மாலை நேர வகுப்பில் பயில்கின்ற மிகவும் கஷ்டப்படுகின்ற மாணவர்களுக்கு படிப்புத்தொகை மற்றும் உடை போன்றவைகளுக்கு உதவிகள் எதுவும் பெற்றுத் தர வழிவகை செய்யுமாறு வேண்டுகிறேன்.

நன்றி

இப்படிக்கு

தங்கள் உண்மையுள்ள

வீ. இருளன்

மேலும் இந்த அறக்கட்டளையின் வளர்ச்சிக்கு என் நண்பர்கள் சிலர் உதவி புரிந்து வருகின்றனர். அவர்கள் பெயர்கள் பின்வருமாறு

1. சி. ஆறுமுகம் (எம். ஏ. எம். பில்)
2. அ. வீரணன் (எம். பில் )
3. சோ. பிச்சை (பி.பி.ஏ)
4. பி. தங்கப்பாண்டி (பி.எஸ்சி)
5. இ. செல்வம் ( ஐ. டி. ஐ)
6. அ. கிருஷ்ணமூர்த்தி

**CHILDREN & ADOLESCENT RECONSTRUCTION TRUST**

**D.NO: 2/125, East Street, Meenakshipatti,** **Reg No: 171/07**
**Vadapalanji( Post ), Thirumangalam( T.K ),**
**Madurai – 625021.**
**E-Mail : erulansky@gmail.com, erulan_sky@yahoo.co.in**

**Mobile :-+ 91 99422 41826 / 95665 63307**


நாள் :
இடம் : மீனாட்சிபட்டி

மதிப்பிற்குரிய ஐயாஇ

வணக்கம்இ நான் மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் கி. மீனாட்சிபட்டியில் வசித்து வருகிறேன். நான் B.Sc., Botany The American College –Yk; M.Sc., Sub-Aqua Marine Ecology and Toxicogenomics, Madurai Kamaraj University-லும் படித்து முடித்துள்ளேன். ஏனது அப்பா இறந்துவிட்டார் அம்மா கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தாள். ஏனக்கு சிறுவயது முதலே சமூக சேவை செய்வதில் மிகவும் ஆர்வம். எனவேஇ நான் எனது ஊரில் பள்ளி மாணவர்களுக்கென ஒரு மாலைநேர வகுப்பு (வுரவழைெ) நடத்தி வருகின்றேன்.

இந்த மாலை நேர வகுப்பு மாணவர்களுக்கு வெறுமனே பள்ளி போன்று அல்லாமல் புது விதமான முறையில் வகுப்பு நடத்தினால் நன்றென எண்ணி நான் கல்லூரிக் காலங்களில் கற்றுத் தேர்ந்த தமிழரின் வீர விளையாட்டான சிலம்பம் மற்றும் தமிழரிடையே காணாமல் போய்க் கொண்டிருக்கும் கரகாட்டம்இ ஒயிலாட்டம்இ போன்ற நாட்டுப்புறக்

கலைகளும் இன்றளவில் அதிகமாகப் பேசப்பட்டு வரும் யோகா தியானம் போன்ற உடல் மற்றும் மனநலப் பயிற்சிகளையும் கராத்தே மல்யுத்தம் போன்ற வீரக் கலைகளையும் என் மாலை நேர வகுப்பு மாணவர்களுக்கும் கற்றுத் தந்தால் பயனாக இருக்குமென எண்ணி அதை நடைமுறைப்படுத்தினேன். அதற்கு உடனடியாக பலன் கிட்டியது. இதன் பயனாக எனது மாலை நேர வகுப்பில் 80 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இப்பயிற்சியின் பயனாக இதுவரை சுமார் 40 மாணவர்கள் மாவட்ட அளவிலான நடைபெற்ற சிலம்பம் மற்றும் யோகா போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளனர். மேலும் 30 மாணவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பல பரிசுகளையும் முதல் மற்றும் இரண்டாம்இ மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவை தவிர பள்ளிகள் அளவிலான போட்டிகளிலும் எம் மாணவர்களே பரிசுகள் பல பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்களில் 20 மாணவர்கள் தாய் அல்லது தந்தையை இழந்தவர்கள் ஆவார்கள். இன்னும் சில மாணவர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர்கள் ஆனால் படிப்பில் இவர்கள் முதல் ஐந்து இடங்களில் வருபவர்கள் என்பது மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும். மேற்கூறப்பட்டுள்ள எல்லாவற்றிற்கும் எவ்வித கட்டணமும் பெறுவதில்லை. அனைத்தும் இலவசமாகவே பயிற்றுவித்து வருகிறேன் .

மேலும் கடந்த 2007 –ல் CAR TRUST (CHILDRENS AND ADOLESCENT RECONSTRUCTION) – TRUST, என்ற பெயரில் அறக்கட்டளை ஒன்று நிறுவி அதன் மூலம் பல பணிகளைக்

குழந்தைகளுக்கென செய்து வருகிறேன். எனவே இவ்வகையான செயல்முறையால் எங்கள் கிராமப்புற மாணவர்கள் நல்ல முறையில் படிப்பதுடன் மட்டுமல்லாமல் விளையாட்டுத் துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். மேலும் இப்பணியானது எங்கள் சுற்று வட்டாரக் கிராமங்களில் உள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையிலும் முயற்சி மேற்கொண்டு வருகிறேன்.

ஏனவேஇ எனது மாலைநேர வகுப்பில் பயில்கின்ற பெற்றோரை இழந்தவர்கள் மற்றும் மிகவும் கஷ்டப்படுகின்ற மாணவர்களுக்கு படிப்புத்தொகை மற்றும் சீருடை போன்றவைகளுக்கு உதவிகள் பெற்றுத் தர வழிவகை செய்யுமாறு வேண்டுகிறேன்.

மேலும் இந்த அறக்கட்டளையின் வளர்ச்சிக்கு என் நண்பர்கள் சிலர் உற்ற துணையாக உள்ளனர். அவர்கள் பெயர்கள் பின்வருமாறு

7. சி. ஆறுமுகம் (M.A.,)
8. அ. வீரணன் (M.Phil)
9. க. திருமலை (M.Sc.,)
10. சோ. பிச்சை (B.B.A.,)
11. பி. தங்கப்பாண்டி (B.Sc.,)
12. இ. செல்வம் (I.T.I.,)
13. அ. கிருஷ்ணமூர்த்தி.

நன்றி

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
வீ. இருளன்

அனுப்புநர்:-

இளைஞர்கள் சார்பாக,

மீனாட்சிபட்டி,

கிண்ணிமங்கலம் பஞ்சாயத்து,

திருமங்கலம் வட்டம்,

மதுரை மாவட்டம்.

பொருள்: இளைஞர்களுக்கான விளையாட்டுப் பொருள் மற்றும் நூலகம் வேண்டி

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்,

எங்கள் ஊர் மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கிண்ணிமங்கலம் பஞ்சாயத்திற்குட்பட்ட மீனாட்சிபட்டி கிராமம் ஆகும். இங்கு 400 குடும்பங்களில் சுமார் 2500-ம் பேருக்கு மேல் வசித்து வருகின்றனர். எங்கள் ஊரில் மிகவும் ஏழ்மையான மக்களே வசித்து வருகின்றனர். இளைஞர் சுமார் 155 நபர்கள் உள்ளோம். இளைஞர்களுக்கென விளையாட்டு மைதானமும் விளையாட்டு பொருட்களும் எதுவுமில்லை. மேலும் எங்கள் ஊரில் உள்ள இளைஞர்கள் பலர் ஒன்றுகூடி பள்ளி செல்லும் பள்ளி மாணவர்களுக்கு மாலை 5.30 லிருந்து 8.00 மணி வரை மாலை நேர வகுப்பு
எடுத்து வருகிறோம். இதற்கென எந்த ஒரு இடமும் நிரந்தரமாக இல்லை. மழைக்காலங்களில் இடமின்றி இவ்வகையான பணிகளை எங்களால் செய்ய இயலவில்லை. மேலும் பல இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி பொழுதை வீணாக கழிக்கின்றனர். எனவே பள்ளி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் என அனைவரும் பயன்பெறும் வகையில் நூலகம் ஒன்று அமைத்து தந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பள்ளி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் சார்பாக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு

இளைஞர்கள் சார்பாக

மீனாட்சிபட்டி